**அம்பாறை நகர சபை**
**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 செப்தெம்பர் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 19 ஆந் திகதியும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 திசெம்பர் 04 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாறை நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் உரிமை கோரப்பட்ட 41 காணிக் கூறுகள் மற்றும் 175 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | உள்ளூராட்சி அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 228,906,546 பெறுமதியான 25 கடைகளுடன் உள்ள அம்பாறை பேரூந்து நிலையத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2019 ஆம் ஆண்டில் சபை நிதியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 04 வேலைகளுக்குரிய பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 1,092,950 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | 2019 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சேனாநாயகபுற நூலகத்தை நவீனப்படுத்தும் வேலைக்கு உரியதாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 717,325 தொகையான கடைகள் மற்றும் மலசல கூடங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | யூனொப்ஸ் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 52,681,935 பெறுமதியான கூட்டுப்பசளை தளத்தின் 03 நிர்மாணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | 2018 ஆம் ஆண்டின் போது அம்பாறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்ட பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 13,750,550 தொகையான கூட்டுப்பசளை தளத்தின் மலக்கழிவுகள் மீள் சுழற்சி அலகு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | விருந்தினர் விடுதிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 139,723 பெறுமதியான 01 அலுமாரி மற்றும் சிறிய குடையுடன் கூடிய 12 மேசைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | உடற் பயிற்சி நிலையத்திற்காக பெறப்பட்ட ரூபா 2,273,850 தொகையான உடற்பயிற்சி உபகரணங்கள் ரூபா 2,445,000 ஆக ரூபா 171,150 தொகை அதிகரித்து மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | 1996 முதல் 2016 வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட / நன்கொடையாக கிடைத்த 07 சிறுவர் பூங்காவில் பொருத்தப்பட்ட 19 சிறுவர் விளையாட்டு உபகரணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (x) | நகர சபைக்குச் சொந்தமான ரூபா 162,644,496 பெறுமதியான 49 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 04 வாகனங்களின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xi) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 280,890 பெறுமதியான 02 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,201,978 பெறுமதியான 26 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். மேலும் கண்டறிந்து எதிர்வரும் வருடத்தின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xiii) | 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,218,000 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xiv) | மீளாய்வாண்டிற்காக மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய அலுவலக சம்பளம், உறுப்பினர் படிகள் மற்றும் பயிலுநர் பட்டதாரி படிகள் ரூபா 5,865,767 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xv) | பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப் பண வருமான சிட்டையிடல் ரூபா 2,348,209 தொகை பொதுப் பேரேட்டில் ரூபா 1,898,755 ஆக ரூபா 449,454 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xvi) | பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 3,239,971 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xvii) | நிலுவையாக இருந்த ஏனைய வருமானக் கணக்கில் ரூபா 3,420,000 தொகையான வரவுப் பதிவு மற்றும் ரூபா 2,550,000 தொகையான செலவுப் பதிவு போலியானதாக காண்பிக்கப்பட்டு கணக்கு சமப்படுத்தப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (xviii) | பதிவேட்டின் பிரகாரம் ரூபா 2,847,000 தொகையான மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமான சிட்டையிடல் பொதுப் பேரேட்டில் ரூபா 2,489,000 ஆக ரூபா 358,000 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xix) | சபை நிதியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 02 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 313,250 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்களுக் காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xx) | உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட 05 வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,157,849 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்களுக் காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xxi) | மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட 08 வேலைகளுக்காக ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 367,985 தொகையான கையிலுள்ள பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்களுக் காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xxii) | நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 3,413,832 தொகையான வைப்பு பெறுவனவுகள் ரூபா 3,283,289 தொகையான வைப்பு செலுத்துகைகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல வைப்புப் பெறுவனவுகளும் செலுத்துதல்களு ம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xxiii) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 576,263 தொகைக்காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்களுக் காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xxiv) | மீளாய்வாண்டிற்குரிய விளம்பர அறிவித்தல்கள் 02 நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 280,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் 08 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் அவைகளுக்குரிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் மீதிகளுக்கும் இடையே ரூபா 6,868,478 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 216,400,978 தொகையான 07 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 7,522,207 தொகையான 03 பொறுப்பு விடயங்கள் என்பவற்றிக்காக தேவையான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(அ)(2) பிரிவு | 37,577,588 | நிலுவையாக இருந்த ஆதன வரி, கடை வாடகை மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(அ)(2) பிரிவின் பிரகாரம் நிலுவை ஆதன வரி, கடை வாடகை, ஏனைய வருமானம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 177 | - | விருந்தினர் விடுதியில் சேகரிக்கப்படுகின்ற பணம் தினந்தோறும் வங்கியில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் இதற்காக குறித்த திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 315 | - | விருந்தினர் விடுதியில் இருந்து தினந்தோறும் சேகரிக்கப்படுகின்ற பணத்திற்காக சரியான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது பணத்தை பாதுகாப்பாக வைப்பதற்காக பூட்டுடன் கூடிய இலாட்சி மற்றும் மேசையொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 571 | 568,029 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | - | 22 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படும். |
| (ஈ) | 2008 சனவரி 25 ஆம் திகதி 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி | - | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டிய 07 இடங்களுக்காக அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த 07 இடங்கள் தொடர்பாக எழுந்திருந்த பிரச்சினைகளை உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,360,541 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,582,732 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,952,838 மீதியொன்றுடன் 02 வங்கிக் கணக்குகளுக்காக வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | அது தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) பெறுமதி சேர் வரி மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் சேகரிக்கப்பட்டு அனுப்பும் பணிகளுக்காக மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்பட்ட நடைமுறைக் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,716,314 ஆக இருந்த போதிலும், அது நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 3,106,386 தொகையை தீர்த்து வைப்பதற்கு போதியளவாக இருக்கவில்லை. | சபையினால் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரியை தீர்த்து வைப்பதற்கு போதியளவான பணம் வைப்புச் செய்யப்பட்டு கணக்குகள் பேணிச் செல்லப்பட வேண்டும். | மக்கள் வங்கியின் கணக்கில் உள்ள முத்திரைக் கட்டண வருமானத்தில் சேகரிக்கப்பட்ட அனுப்புவதற்குரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 8,872,372 | 10,060,212 | 7,921,052 | 29,268,349 | 8,831,000 | 8,903,372 | 8,377,577 | - |
| (ii) | வாடகை | 8,279,524 | 12,283,369 | 8,163,716 | 7,921,520 | 18,019,880 | 11,441,405 | 11,443,976 | 1,435,927 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,941,958 | 2,941,958 | 2,942,019 | 0 | 1,404,000 | 3,227,021 | 3,227,021 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 36,730,744 | 4,387,775 | 2,793,635 | 3,877,120 | 29,295,475 | 35,991,983 | 35,619,662 | 354,852 |
| | | **56,824,598** | **29,673,314** | **21,820,422** | **41,066,989** | **57,550,355** | **59,563,781** | **58,668,236** | 32,344,056 |

#### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 62,017,349 ஆக | நிலுவை வருமானம் விரைவாக | இதற்காக திட்ட முறைமையொன்று எதிர்காலத்தில் ஈடுபடுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| இருந்ததுடன், ஆண்டில் ரூபா 21,820,422 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமான சேகரித்தலின் செயல் முன்னேற்றம் 35 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.3 ஆதன வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு அறவிட வேண்டிய ஆதன வரி ரூபா 29,268,348 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்ட உப விதிகள் சபையில் பின்பற்றப்பட்டிருந்துதுடன், மேலும் சில உப விதிகள் தயாரிக்கப்படுகின்றது. |

**(ஆ) நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேசத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூபா 904,676 தொகை செலவில் நவீன மயப்படுத்தப்பட்ட சேனாநாயகபுற நூலக கட்டிடம் உரிய | நூலக கட்டிடம் நோக்கமிடப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட | தற்காலிகமாக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமை |

| | | |
|---|---|---|
| நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் முறையான உடன்படிக்கையின்றி சேனாநாயகபுற சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்திற்காக பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. | வேண்டும். | நடவடிக்கைகளுக்கு இடவசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் , அவர்களை அகற்றி எதிர்காலத்தில் நூலகமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் உக்காத கழிவுப் பொருட்கள் மண் படையொன்றினால் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் வகைப்படுத்தப்பட்ட உக்காத கழிவுப் பொருட்கள் நீண்ட காலமாக திறந்த வெளியில் குவிக்கப்பட்டிருந்தமை போன்றவற்றின் காரணமாக சபைக்குச் சொந்தமான கூட்டுப் பசளைத் தளத்தில் அமைந்துள்ள மலசலகூட நிலம் நிரம்பியமை மற்றும் உக்காத கழிவுப் பொருட்களின் மீள்சுழற்சி நிலையத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நியதிகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசனையின் பிரகாரம் மண் படையொன்றை இட்டு மூடப்பட்டிருந்த போதிலும், தொடர்ச்சியாக கழிவுப் பொருட்கள் குவிக்கப்படுவதுடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் சட்ட விதிகளுக்கு இணங்க கழிவுப் பொருள் விற்பனை மற்றும் அகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டியமையால் அதற்காக சிறு தாமதங்கள் ஏற்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) | அம்பாறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் ரூபா 13,750,550 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 2018 சனவரி 24 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்ட மல கழிவுகளை மீள்சுழற்சி அலகு பயன்படுத்தப்படாதிருந்ததுடன், | மல கழிவுகளை மீள்சுழற்சி அலகில் பயன்படுத்தக் கூடியதாக தயாரித்து பயன்படுத்துதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

தளத்திற்கு எடுத்து வரப்படுகின்ற மல கழிவுகள் மீள்சுழற்சி முன்னர் அகற்றப்பட்ட இடத்திற்கு அடுத்தாலுள்ள திறந்த இடத்தில் போடப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை அதிகார பிரதேசத்தில் 02 வியாபார நிறுவனங்களினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 02 அறிவித்தல் பதாதைகளுக்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 280,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | ஒரு அறிவித்தல் பதாதைக் கட்டணம் தொடர்பாக ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படுவதுடன், ஏனைய பதாதையின் கட்டணங்களுடன் எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

#### (அ) ஊழியர் வெற்றிடம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் பதவியணியில் 26 பதவிகளுக்காக 58 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், முகாமைத்துவ உதவியாளர் பதவியில் இரண்டு உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டன. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அந்த ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் சேர்த்ததன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 2019 இன் இடம் மாற்றங்களில் முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர்களில் 02 பேர் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்ததுடன், இம்முறை இடமாற்றங்களில் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழயர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேவையை விட்டுச் சென்ற ஊழியரிடம் இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 130,920 தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | தற்போது சேவையை கைவிட்டுச் சென்ற ஊழியரிடமிருந்து அவ்வப் போது மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 1985 மார்ச் 20 ஆம் திகதிய 08/01/38 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சகல கட்டிடங்களும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் நிர்மாண பிரமாணங்களுக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்டுள்ளதா எனவும், கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமானதா எனவும் பரீட்சித்து தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நகர சபையினால் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட 109 கட்டிட திட்டங்களுக்கு இடையே 105 திட்டங்கள் பரீட்சிக்கப்பட்டு தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட 105 கட்டிட திட்டங்களுக்காக தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட வேண்டும். | தரச்சான்றிதழ் விநியோகிப்பதற்காக சகலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் தரச் சான்றிதழ் வழங்கப்படாதிருந்த கட்டிடங்களில் குடியிருக்கின்ற, பயன்படுத்துகின்ற அல்லது பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற கட்டிடங்களுக்காக நாளொன்றுக்கு ரூபா 50 வீதம் தணடப் பணம் அறவிடப்பட்டு தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நகர சபையினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் தரச்சான்றிதழ் பெறாத கட்டிடங்களில் குடியிருக்கின்ற, பயன்படுத்துகின்ற அல்லது பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற கட்டிடங்களுக்காக நாளொன்றுக்கு ரூபா 50 வீதம் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டும். | தண்டப் பணத்தை அறவிடல் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஆம் ஆண்டிற்குரிய அனுமதியற்ற 21 நிர்மாணங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது உரிய வர்த்தமானியின் பிரகாரம் அறவிட வேண்டிய கட்டணங்களை அறவிட்டு மேவுகை அங்கீகாரம் வழங்குவதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கோ 2020 செப்தெம்பர் 18 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்குரிய 21 அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்குரிய 21 அனுமதியற்ற நிர்மாணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளவர்களிடம் இருந்து தற்போது இருவர் கட்டிட அனுமதிப் பத்திரத்தை கையளித்திருந்தனர். இதில் மூன்று பேரின் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், ஏனையவர்களுக்காக தற்போது அறிவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓட்டத்திலிருந்த அகற்றப்பட்ட ரூபா 8,319,050 பெறுமதியான 03 வாகனங்கள் நீண்ட காலம் முதல் இயற்கை உபாதைகளுக்கு உட்பட்டு சபை வளவில் காணப்பட்டது. | சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற 41 காணிக் கூறுகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் சட்டரீதியான உரித்து சபையின் பெயரில் கையேற்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணிக் கூறுகளின் உரித்தை கையேற்பதற்காக 18 காணிக் கூறுகளுக்கு மாத்திரம் தற்போது அளவிடல் கட்டளைகளுக்காக நிலஅளவையாளர் அலுவலகத்திற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், மிகுதி காணிகளுக்காகவும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1983 முதல் 2016 வரையான காலப்பகுதியில் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து நகர சபைக்கு கிடைக்கப்பெற்ற பெறுமதி குறிப்பிடப்படாத 03 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை உள்ளடக்கிய ரூபா 35,486,609 பெறுமதியான 18 வாகனங்கள் மற்றும் உபகரண விடயங்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் சட்டரீதியான உரித்து சபையின் பெயரில் கையேற்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவற்றை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உடற்பயிற்சி நிலையத்தில் 03 Treadmills இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | சபை நிதியத்தை கவனத்தில் கொண்டு இவற்றை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1986 முதல் 2011 வரையான காலப் பகுதியில் நகர சபைக்கு அவ்வப்போது கிடைத்த ரூபா 4,778,945 பெறுமதியான 13 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 1½ முதல் 15 வருடங்கள் வரையான காலத்திலிருந்து எவ்வித பணிகளிலும் பயன்படுத்தப்படாமல் பல்வேறு இடங்களில் தரித்து வைக்கப்பட்டிருந்தன. | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை பயன்படுத்துதல் வேண்டும். | பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நகர சபையின் வருமான நிலைமையினை கவனத்தில் கொண்டு மீண்டும் பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பெறுமதி சமர்ப்பிக்கப்படாத D3K டோசர் கெட் இயந்திரம் மற்றும் ரூபா 32,083,984 பெறுமதியான 03 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பன 2019 ஆம் ஆண்டின் போது 889 இயந்திர மணித்தியாலங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையினால் குறைவாக பயன்படுத்திய நிலையில் காணப்பட்டது. | இயந்திரங்களை முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். | இந்த வாகனங்கள் 2019 ஆம் ஆண்டின் போது 890 மீற்றர் மணித்தியாலங்கள் அளவில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. |

### 3.5.4 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நகர சபைக்குச் சொந்தமான 35 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன், 29 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல வாகனங்களுக்காகவும் வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி பூட்கை பெறப்பட வேண்டும். | இது வரையும் வருமான அனுமதிப் பத்திரம் இல்லாத வாகனங்களுக்காக எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களுக்காக 2019 ஆம் ஆண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 31,597 கிலோ மீற்றரிற்காக தற்போதைய சபையினால் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள் சமப்படுத்தல் வீதத்தின் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டிய எரிபொருள் அளவு 5,158 லீட்டராக இருந்த போதிலும், அதற்காக எரிபொருள் லீட்டர் 5,832 பயன்படுத்தப்பட்டதாக நாளாந்த ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டு எரிபொருள் 674 லீட்டர் மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாக பெறப்பட்ட எரிபொருளின் பெறுமதி ரூபா 75,277 ஆகும். | பரிசோதனை மேற்கொண்டு சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் உரிய பொறுப்பு வாய்ந்தவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். | ஆராய்ந்து பார்த்து இதற்கான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 15(1) இன் பிரகாரம் 2020 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் 2020 செப்தெம்பர் 02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் நகர சபையினால் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நியதிச் சட்டங்களில் காண்பிக்கப்பட்டுள்ள காலத்தில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |